# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்கள் முன்பாக**

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*************

முறையீட்டு மனு எண்.0023/2015

ஆணை எண். 10 /2015

நாள்:6 /10/2015

திரு. மு. பாலகிருட்டிணன்,
எண்.4, கீழ சண்முகபுரம்,
ப்ராப்பர் தெரு,
தூத்துக்குடி.

- முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
தூத்துக்குடி நகராட்சி,
தூத்துக்குடி

- எதிர் மனுதாரர்

தூத்துக்குடி, கீழ சண்முகபுரம், ப்ராப்பர் தெருவை சேர்ந்த திரு. மு. பாலகிருட்டிணன் என்பவர் தூத்துக்குடி மாவட்ட மயானத்தில் நடக்கும் முறைகேடு குறித்து விசாரணை மேற்கொள்ள வேண்டி மனு இம்முறைமன்றத்தில் சமர்பித்துள்ளார். இந்த மனு 23 எண்ணிட்ட 29.04.2015 நாளிட்ட மனுவாக பெறப்பட்டது.

<u>**ஆணை**</u>

தூத்துக்குடி, கீழ சண்முகபுரம், ப்ராப்பர் தெருவை சேர்ந்த திரு. மு. பாலகிருட்டிணன் என்பவர் தூத்துக்குடி மாவட்ட மயானத்தில் இறந்தவர்களை புதைக்கும் இடத்தில், அனுமதியின்றி கல்லறை நினைவு மண்டபங்கள் கட்டுவதால் இடநெருக்கடி ஏற்படுகிறது என தூத்துக்குடி மாநகராட்சியில் சுடுகாட்டில் தரைமட்டம் கட்ட அனுமதி வழங்கக் கூடாது என சமர்பிக்கப்பட்ட முறையீட்டு மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு 04.05.2015 அன்று தூத்துக்குடியில் உள்ள ஜி.சி.ரோடு அரசு விருந்தினர் மாளிகையில் மனுதாரர் திரு.மு.பாலகிருட்டிணன், திரு.சொ. ராஜாகோபால், செயற்பொறியாளர் மற்றும் திரு.மு.சரவணன், உதவி ஆணையர் (பொ) கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் மனுதாரர் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு மாநகராட்சி பாளைரோட்டில் மேற்கு பகுதியில் அமைந்துள்ள மையவாடி கல்லறை மற்றும் நினைவு மண்டபங்கள் அடிமட்டம் கட்ட தற்போது மாநகராட்சி அனுமதிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது. இது மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு அவர் கையொப்பமிட்டுள்ளார். மேலே கூறப்பட்ட சூழ்நிலையில் மனுதாரரின் கோரிக்கை நிறைவேறியுள்ளதால் இக்கோப்பின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக்கொள்ள இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து ஆணையிடுகிறது.

ஒம்/— முனைவர் சோ. அய்யர்
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//

6/10/15

கண்காணிப்பாளர்

பெறுநர்,

திரு. மு. பாலகிருட்டிணன்,
எண்.4, கீழ சண்முகபுரம்,
ப்ராப்பர் தெரு,
தூத்துக்குடி.